Registe ed as a News Paper in Ceylon P. M. G. No. H. A. 9/300 of 1953.

விரோதிவூ (1889)ஃ ஆவணி மீ 28உ ஆரம்பமானது.

# இந்து சாதனம்

சிவமயம்

வெள்ளிதோறும் வெளிவருவது

தனிப்பிரதி விலை: சதம் 10.

[புத்-எசு] பார்ப்பானம்:- குரோதி வூ வைகாசி மீ உ வெள்ளிக்கிழமை (15 May. 1964) [இல-சு]

## சைவ சமய உண்மைகள்

சிவஸ்ரீ வி. சிதம்பரராமலிங்கபிள்ளை அவர்கள்
முன்னாள் திருவாவடுதுறை ஆதீன வித்வான்.

1. கடவுளும், உயிர்களும், உயிரறிவை மறைத்து நிற்தும் தடைப் பொருள்களும் என்றும் உள்ளன (கடவுள் - பதி, உயிர்கள் - பசு, தடைப்பொருள் - பாசம்.)

2. கடவுள் சிவபெருமான் ஒருவரே. அவர் எல்லா அறிவும் எல்லா முதன்மையும் எல்லா அனுக்கிரகமும் இயல்பாகவுடைய அதிபரிசுத்தர்.

3. உயிர்கள் எண்ணிறந்த பல. அவ்வுயிர்கள் பல வேறு வகைப்பட்ட சிற்றறிவும் பாதந்திரமும் கடவுள் அனுக்கிரகமின்றி அமையாமையும் இயல்பாகவுடையன வாய்ச் சார்ந்ததன் வண்ணமாய் நிற்பன.

4. உயிரறிவை மறைத்து நிற்கும் தடைப்பொருள்கள் ஆணவம் கன்மம் மாயை என்னும் மூன்றுமாம். அவற்றுள் ஆணவம் நெல்லில் உமி போன்றும் செம்பிற் களிம்பு போன்றும் உயிரின் குற்றமாய் உடன் தோன்றி நிற்பது. இருள் ஒன்றேயாயினும் பல கண்களையும் மறைத்து நிற்பது போல ஆணவம் ஒன்றேயாயினும் பல உயிர்களின் அறிவையும் மறைத்து நிற்கும். கன்மம், உயிர்கள் தானென்னும் முனைப்போடு மனம் வாக்குக் காயமென்னும் மூன்றினும் செய்யுந் தொழில். மாயை, ஆடையிற் படிந்த அழுக்கை நீக்குதற்கு ஆடையிற் செறிக்கப்படும் உவர்போல, உயிரிற் படிந்த ஆணவத் தடை நீக்குதற்கு உயிரிற் செறிக்கப்பட்டது.

5. சிவபெருமான் அநாதியே ஆணவத்திலே அழுந்திக் கிடந்த உயிர்கள்மேல் வைத்த பெருங் கருணையாலே சிருஷ்டி, திதி, சங்காரம், திரோபவம், அனுக்கிரகமென்னும் ஐந்து தொழில்களையும் செய்தருளுவர். அவற்றுள் சிருஷ்டி யென்பது உயிர்கட்கு அவற்றின் கர்மத்துக்கு ஏற்ப மாயையிலிருந்து சரீரம் உலகம் முதலியவற்றை உண்டாக்கிக் கொடுத்தல். திதி யென்பது அங்ஙனம் உண்டாக்கப்பட்ட சரீரம் உலகம் முதலியவற்றைப் பாதுகாத்தல். சங்காரமென்பது அச்சரீரம் உலகம் முதலியவற்றை மாயையின் ஒடுக்குதல், திரோபவமென்பது உயிர்கள் தாம் செய்த வினைப் பயன்களை அனுபவிக்கும்படி செய்தல். இது திதி நிகழும்போது நடைபெறுவது. அனுக்கிரகமென்பது உயிர்களுக்கு ஆணவம் கன்மம் மாயை யென்னும் மூன்று தடைகளையும் நீக்கிப் பேரின்பங் கொடுத்தல். இது சங்காரம் நிகழும்போது நடைபெறுவது.

6. உயிர்கள் தமக்குக் கிடைத்த சரீரத்தின் உதவியால் இவ்வுலகத்திலே நல்வினை தீவினைகளைச் செய்யும். இவற்றின பயனாகிய இன்ப துன்பங்களை முறையே சுவர்க்கத்திலும் நரகத்திலும் அனுபவிக்கும். பின்னர் மறுபடியும் அவை (எஞ்சிய) கர்மத்திற்கேற்ப இவ்வுலகிற் பல பிறவிகளிற் பிறக்கும். இங்ஙனம் உயிர்கள் மாறிமாறிப் பிறந்தும் இறந்தும் வரும். உயிர்களுக்குக் கிடைக்கும் பிறவிகள் பலவற்றுள்ளும் மக்கட் பிறப்பே முத்தியின்பம் பெறுதற்குக் கருவியாதலால் மிகச் சிறந்தது.

7. மனிதப் பிறப்புப் பெற்றவர்கள் முன்பல பிறவிகளை யெய்தினமை காரணமாகச் சிறிது சிறிது அறிவு விளக்கம் பெற்றுப் படிப்படியாகப் பல வேறுவகைப்பட்ட மதங்களிலே நின்று அவ்வந் நூல்களின் விதித்தபடி ஒழுகுவர்; அவ்வாறு ஒழுகிய புண்ணிய விசேடத்தால் மேலான சைவ சமயத்திற் புகுந்து வேத சிவாகமங்களில் விதித்த படி ஒழுகுவர்.

8. வேதசிவாகமங்களிலே விதிக்கப்பட்ட சாதனங்கள் சரியை கிரியை யோகம ஞானமென நான்காம். அவற்றுள் சரியையாவது ஒழுக்கநெறியிலே நின்று சிவபெருமானைச் சரீரத்தால் வழிபடுதல்; கிரியையாவது ஒழுக்க நெறியிலே நின்று சிவபெருமானைச் சரீரத்தாலும் மனத்தாலும் வழிபடுதல்: யோகமாவது ஒழுக்க நெறியிலே நின்று சிவபெருமானை மனத்தால் வழிபடுதல்: ஞானமாவது சிவபெருமானை அறிவால் வழிபடுதல்.

9. சரியை கிரியை யோக நிலைகளிலே நின்று சிவ

(தொடர்ச்சி 3-ம் பக்கம்)

### நற்சிந்தனை
(தாலாட்டு)

மத்தம் மதிசூடி
மழவிடையின் மீதேறி
எத்திசையுஞ் செல்லும்
இறைவனே கண்வளராய்.

### சித்தன்கேணி மகாகணபதிப் பிள்ளையார் கோயில்

எதிர்வரும் சனிக்கிழமை 16-5-64 இல் சித்தன்கேணி மகா கணபதிப்பிள்ளையார் கோயிலில் கொடியேற்றமும். அதைத்தொடர்ந்து வரும் நாட்களில் ஏனைய திருவிழாக்களும் நடைபெற இருக்கின்றன.

### நாவலர் நல்வாக்கு

### ஆலயங்களில் செய்யத்தகாதவை

1. ஸ்நானஞ்செய்யாதுபோதல்
2. தோய்த்துலராத வஸ்திரம் தரித்துக்கொண்டு போதல்,
3. கால்கழுவாது போதல்.
4. ஆசௌசத்துடனே யோதல்
5. தலையில் வஸ்திரந் தரித்துக் கொள்ளுதல்,
6. சட்டை இட்டுக்கொள்ளுதல்
7. போர்த்துக்கொள்ளுதல்,
8. மேல் வேட்டி போட்டுக் கொள்ளுதல்.
9. பாதரக்ஷை இட்டுக்கொள்ளுதல்.
10. வாகனமேறிக்கொள்ளுதல்,
11. குடை பிடித்துக் கொள்ளுதல்,
12. வெற்றிலை பாக்கு உண்டல்,
13. துப்புதல்,
14. மலசலங்கழித்தல்,
15. மூக்கு நீர் சிந்துதல்,
16. மயிர் கோதி முடிதல்,
17. சூதாடுதல்,
18. சிரித்தல்,
19. சண்டையிடுதல்,
20. வீண் வார்த்தை பேசுதல்,
21. காமப்பற்று வைத்தல்,
22. காலை நீட்டிக்கொண்டிருத்தல்,
23. சயனித்தல்,
24. ஆசனத்திருத்தல்,
25. சுவாமிக்கும் பலிபீடத்துக்கும் குறுக்கே போதல்,
26. சுவாமிக்கும் பலிபீடத்துக்கும் இடையிலே நமஸ்காரம்பண்ணுதல்,
27. சுவாமிக்குக காலை நீட்டி நமஸ்காரம்பண்ணுதல்,
28. சுவாமிக்குக் காலை நீட்டி அங்கப்பிரதக்ஷிணம்பண்ணுதல்
29. நிருமாலியத்தைக்கடத்தல்,
30. நிருமாலியத்தை மிதித்தல்,
31. தூபி, துவஜஸ்தம்பம், பலிபீடம், விக்கிரகம் என்னும் இவைகளின் நிழலை மிதித்தல்,
32. விக்கிரகத்தைத் தொடுதல்-

இந்தக் குற்றங்களைச் செய்தவர்கள் நரகத்திலே தண்டிக்கப்படுவார்கள் என்று ஆகமங்களும் புராணங்களும் சொல்லுகின்றன. குளிக்கப் போய்ச் சேறு பூசிக்கொள்வது போலச் சுவாமி தரிசனமாகிய புண்ணியஞ் செய்யப் போய்ப் பாவத்தைத் தேடிக் கொள்வது புத்தியன்று. எல்லாரும் இந்தக் குற்றங்களை விட்டு, விதிப்படி சுவாமி தரிசனஞ் செய்து, திருவருளைப் பெற்று உய்யக்கடவர்கள்.

## மக்களை நன்னெறியில் ஒழுகச் செய்யச் சமயக்கல்வி தேவை

### நாயன்மார்கட்டுப் பாலர் பராமரிப்புக்கழக வருடாந்தப் பொதுக்கூட்ட வைபவம்

"சைவமாணவர்களின் கல்வி விருத்தியில் சைவத் தாபனங்களும், சைவ அறிஞர்களும பெற்றோரும் சேர்ந்து ஒருமித்துழைத்து எம்எதிர்காலச்சந்ததியினரின் நல்வாழ்வுக்கான ஒரு திட்டத்தை அமைக்கவேண்டும்; "சமயக்கல்வி — சமயக் கல்வி" என்றெல்லாம் பத்திரிகைகளிலும், கல்லூரி வெளியீடுகளிலும் எழுதப்பட்டு வருவதால்மட்டும் சமயக் கல்வி வளர்ந்துவிடாது பாடசாலைகளில் நடைபெறும் விசேட வைபவங்களில் சமயக் கல்வியின் தேவையைப்பற்றிப் பிரசங்கம் செய்வதாலும் சமயக் கல்வி நிலை நாட்டப்படமாட்டாது; சமயக் கல்வி இன்று மிக அவசியமானதோன்றுய்விட்டது; இத்தேவையைப் பூர்த்தி செய்ய, சைவ அறிவு ஒழுக்கம் நிரம்பிய ஆசிரியர்கள் கையில் மாணவர்கள் ஒப்படைக்கப்பட வேண்டும்"

இவ்வாறு யாழ். நாயன்மார்கட்டு பாலர் பராமரிப்புக்கழகத்தின் வருடாந்தப்பொதுக் கூட்டத்தில் தலைமையுரை நிகழ்த்தும்போது கழகத்தலைவர் ஆசிரியர் திரு. ச. சதாசிவம்அவர்கள் குறிப்பிட்டார்கள். இவ்விழா சென்ற ஞாயிற்றுக்கிழமை (10-5-64) மாலை 7மணியளவில் ஷெகழக மண்டபத்தில் நடைபெற்றது. ஏராளமான பெற்றோரும் அறிஞர்களும்கலந்துகொண்டிருந்த இவ் விழாவில் தலைவர் 'பாடசாலைகளும சமயக்கல்வி இடம்பெறவேண்டிய முறையும்'பற்றி விளக்கமாகப் பேசியதோடு பெற்றோரின் கடமைகளையும் குறிப்பிட்டார்கள். கழக வருடாந்த அறிக்கை, வரவு செலவுக்கணக்கு முதலியன அங்கீகரிக்கப்பட்டபின், புது உத்தியோகத்தர் தெரிவு நடைபெற்றது.

கழகத்தின் காப்பாளர்களாக திரு இ. சரவணமுத்து அவர்களும்,வைத்தியகலாநிதி க. குகநாகதாசன் அவர்களும் ஆசிரியர் திரு. சு பரநிருப சிங்கம் அவர்களும் தெரிவு செய்யப்பட்டனர்

கழகத்தலைவராக: ஆசிரியர் திரு. க சொக்கலிங்கம் அவர்களும், இணைக்காரியதரிசிகளாக திரு. தி. தருமலிங்கம், திரு வே. பூவிலிங்கம் ஆகியோரும், தனாதிகாரியாக திரு. சி. பதமநாதன் அவர்களும். நிர்வாகசபை உறுப்பினர்களாக திருவாளர்கள்: சி. பரமலிங்கம், அ. தம்பையா, கா இரகுநாதன் என்போரும் தெரிவு செய்யப்பட்டனர்.

ஆசிரியர் திரு. க. சொக்கலிங்கம்அவர்கள்பேசும்போது மக்கள் மத்தியில் சமயஅறிவு இன்மையால், கொலை, தற்கொலை களவு முதலிய பாவச் செயல்கள் பெருகுகின்றன என்றும், அவர்களுக்கு நல்ல சிந்தனையை ஊட்டத்தக்கசமயப்பிரசாரம்செய்வித்துஅத்தகையோரை நல்வழிப்படுத்துதற்கு இதுபோன்ற கழகங்கள் முன்வரவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார். செயலாளரின் நன்றியுரையுடன்கூட்டம்நிறைவுற்றது.

"நாதன்"

## கதிர்காம தேவாலயத்தில் பூசை தடைப்பட்டிருக்கின்றது

சென்ற 6-5-64 புதன்கிழமை காலைப்பூசை நடைபெறறபின் கதிர்காம மகா தேவாலயக்கதவுகள் பூட்டப்பட்ட நிலைமையிலிருக்கின்றனவெனவும், பூசையைக் காணச் செலலும் ஆயிரக்கணக்கான அன்பர்கள் ஏமாற்றமடைகின்றார்களெனவும் கூறப்படுகின்றன. தேவாலய நிருவாகி பசநாயக நிலாமையின் வரவை யாவரும் எதிர் பார்த்துக்கொண்டிருக்கின்றனர்.

### கதிர்காமம் புனித நகராக்கும் திட்டம்

கதிர்காமம் புனிதநகராகும் திட்டத்தில் கிரிவிகாரைக்கருகிலுள்ள கடைகள் உளநாட்டு இலாகாவினால் அமைக்கப்பட்ட கட்டடங்களுககு மாற்றப்பட்டன. பலமதத் தாபனங்களுக்கும் யாத்திரிகர் விடுதிகளும் தேவையான கட்டடங்களும் புறம்பாக அமைக்கப்படுகின்றன. கதிர்காமம் புனிதநகராகும் திட்டம இன்னும் ஆறுமாத காலத்தில பூர்த்தியாகுமெனச் செய்திகள் கூறுகின்றன.

### வேலணை மேற்கு மகாகணபதிப்பிள்ளையார் கோயில்

இக்கோயில் உற்சவம் 15-5-64 வெள்ளிக்கிழமை ஆரம்பமாகின்றதெனவும், இரதோற்சவம் 24-5-64-ல் அன்றும், தீர்த்தோற்சவம் 25-5-64-ல் அன்றும் நடைபெறுமெனவும கோவில் நிருவாகிகள் தெரிவிக்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவரானினம்
வீழ்கதண்புனல்வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல்லா மரனுமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

குரோதி ஸூ வைகாசி மீ உஉ வெள்ளிக்கிழமை

## பட்டத் தேர்வுகளும் பாட நூல்களும்

இலங்கையில் சைவசமயம் சம்பந்தமாக நடாத்தப்படும் பட்டத் தேர்வுகள் இரண்டு. அவற்றுள் ஒன்று சைவப்புலவர் தேர்வு. மற்றது சித்தாந்த பண்டிதர் தேர்வு.

சைவப்புலவர் தேர்வைத் தென்னிந்திய சைவ சித்தாந்த மகா சமாசத்தார் நடாத்தி வருகிறார்கள். யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையாரும் இந் நாட்டு மாணவர்களது பல்வேறு நலன்களைக் கருதி இத் தேர்வினை நடாத்தத் திட்டமிட்டுப் பாடவிதானமுமமைத்து இவ்வருடம் முதலாக நடாத்தவிருக்கின்றார்கள்.

சித்தாந்த பண்டிதர் தேர்வு, கொழும்பு விவேகானந்தசபையாரால்நடாத்தப்பெற்று வந்தது. இச்சபையார் இத்தேர்வைச் சில வருடங்கள் நடாத்திய பின், சைவபரிபாலன சபையாரிடம் மேற்கொண்டு நடாத்தும்படி ஒப்படைத்துள்ளார்கள். அதற்கிணங்க இவ்வருடந்தொடக்கமாகச் சைவப் புலவர் பரீட்சையோடு, சித்தாந்தபண்டிதர் பரீட்சையையும் நடத்த வேண்டிய பொறுப்புச் சைவபரிபாலன சபைக்கு உளது.

தென்னிந்திய சைவசித்தாந்த மகா சமாசத்திய சைவப்புலவர் தேர்வுகளை இலங்கையில் நடாத்துவதற்குப்பொறுப்பேற்று இன்று வரை நடாத்தி வருபவர்கள் அ. இ. சைவப்புலவர் சங்கத்தினராவர்.

எனவே, இப்பொழுது இலங்கையில் சைவ சமயப் பட்டத் தேர்வுகளை நடாத்தும் பொறுப்பு சைவபரிபாலன சபை, சைவப்புலவர் சங்கம் ஆகிய இரண்டினுக்குமே யுளதென்பது வெளிப்படை.

இந்த இரண்டு சங்கங்களும் ஷை தேர்வுகளை நடாத்திச் சைவாசிரியர்களிடத்தும் மாணவர்களிடத்தும் சைவ சித்தாந்த நல்லறிவை விருத்தி செய்ய முற்பட்டமை சைவ நன்மக்கள் யாவர்க்கும் பெருமகிழ்வளிப்பதாகும். ஆனல் தேர்வுகளுக்கு விண்ணப்பிக்கும் மாணவர்கள், சாத்திரம், உரைநடை, இலக்கணம் ஆகிய பாடங்களுக்குரிய நூல்களுட் பலவற்றை இலங்கையிற் பெறமுடியவில்லையெனவும், தாய்நாட்டுக்கு எழுதிப்பெறுவதும் இக்கால அரசியற் சூழ்நிலையில் கஷ்டமாயிருக்கின்றதெனவும் தெரிவிப்பதைப் பார்க்கும்போது, இந்த நிலையில், தேர்வுகளை நடாத்துவதாற் பயனென்ன? என்ற விசாரம் உண்டாகின்றது; மனம் வருத்தமடைகின்றது.

உடலுக்குத்தேவையான நல்லுணவுகளை உண்டு வளரவேண்டிய பிள்ளைக்கு, அவ்வுணவுகளைப் பெறும் வழிவகைகளைச் செய்து வைக்காமல், வருடமெல்லை தோறும் பிள்ளையின் உடல் நலத்தைப் பரீட்சித்துத் தராதரப்பத்திரம் வழங்குவதால், அப்பிள்ளை அடையத்தக்க பயன் யாது? இங்கே பிள்ளை அடைய வேண்டிய முதல் உதவி: தேவையான உணவுகளேயல்லாமல் தராதரப்பத்திரமன்று; அதன்பின் பிள்ளையுண்ட உணவால் அஃதடைந்த தகுதி ஆராய்ந்தறியத்தக்கது.

சைவ பரிபாலன சபை, அ. இ. சைவப்புலவர் சங்கம் இரண்டும், சைவப்புலவர், சித்தாந்த பண்டிதர் தேர்வுகளுக்குத் தோற்றும் மாணவர்களாகிய குழந்தைகளுக்கு வழிகாட்டவேண்டிய தாபனங்கள் இவை. குழந்தைகளின் நலனை ஆராய்ந்து நல்வழிப்படுத்துவது நல்லதே. ஆனல், அவர்களது நலனுக்கு மூலாதார முதற்றேவை 'பாட நூல்களே' என்பதைச் சற்றேனும் மறவாமல், அந்நூல்களைத் தாய்நாட்டிலிருந்து மாணவர்கள் பெறுதற்காய வழிகளைக் காட்டியும், முடியுமானல் தாமே பெற்றுக் கொடுத்தும், அங்ஙனம் பெறுதற்கரிதாயவிடத்துத் தாமே வெளியிட்டும் உதவ வேண்டியதே அவைதம் முதற் கடமை — முதற் பொறுப்பு என்க.

இங்குச் சுட்டிக்காட்டிய உண்மையை நன்குணர்ந்து சைவப்புலவர் சித்தாந்த பண்டிதர் தேர்வுகளுக்குத் தோற்றும் மாணவர்களுக்கு வேண்டிய பாட புத்தகங்களை அவர்கள் இலகுவிற் பெறுதற்கு இவ்விரு சங்கங்களும் உதவ முற்படும் என்னும் [illegible] திப்பாடுடையேம்.

—:—

## அணிந்துரை அரங்கம்

**அன்னை லலிதாம்பிகை அருட் பேராயிரம்.**

ஆக்கியோன் :
பாரத்துவாஜி பிரம்மஸ்ரீ
க. வை. ஆத்மநாதசர்மா அவர்கள்.

விலை: ரூபா 2-00

வடமொழியில் உள்ள லலிதா சகஸ்ர நாம தோத்திரத்தைத் தமிழில் மொழி பெயர்த்து அன்னை லலிதாம்பிகை அருட்பேராயிரம் என்ற பெயருடன் பாரத்துவாஜி பிரம்மஸ்ரீ க. வை. ஆத்மநாதசர்மா அவர்கள் சைவ மக்கள் வாசித்தும் கற்றும் பாராயணம்பண்ணியும் உய்யும் பொருட்டு உதவியிருக்கிறார்.

ஒரு மொழியில் உள்ள ஒருசொல், பலபொருட்களைக் கருதக்கூடும். ஆனல் மொழி பெயர்க்கும்போது அந்தச் சொல்லின் முக்கியமான கருத்தை மட்டுமே எடுத்துக் காட்ட முடியும். உதாரணமாக ஸ்ரீமாதா என்ற நாமத்தைஎடுத்துக்கொள்ளுவோம். ஸ்ரீ என்ற வடமொழிச்சொல் லுக்கு இலட்சுமி, சரஸ்வதி, தெய்வத் தன்மை, அழகு, அறிவு என்ற பல கருத்துக்கள் உண்டு. மாதா என்ற சொல் பொதுவாகத் தாயைக் குறிக்கும். ஸ்ரீ என்ற சொல் லிற்கு நஞ்சு என்றும் ஒரு கருத்தும் உண்டு. மா என்ற சொல்லிற்கும் நிலைக்கச் செய்த என்றகருத்தும்உண்டு. ஆனபடியால் ஸ்ரீ மாதா என்ற நாமத்திற்கு அழகு, அறிவு, செல்வம் பொருந்திய தாய் எனக் கருத்துக் கொள்ளலாம். சிவனது கண்டத்தில் நஞ்சை நிறுத்திய அல்லது தடுத்த சக்தி என்னும் கருத்தையும் கொள்ளலாம். அருட்பேராயிரத்தில "அகில உலகிறதும் ஆகியாம் அன்னையே" என்று மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. இந்த மொழி பெயர்ப்பில் முக்கியமான கருத்தை விளங்கக் கூடியதாக இருக்கிறது.

வேத வியாசரால் வகுக்கப்பட்ட பிரம்மாண்டபுராணத்தில் மூன்று அத்தியாயங்களைக் கொண்டது லலிதா சகஸ்ர நாமம் என்ற நூல்

எத்தனையோ கோடிபிரம்ம விஷ்ணுக்களும் தேவர்களும் ஸ்ரீ லலிதாம்பிகையைத் தரிசித்து வணங்கக்கூடிய ஒரு தருணம்வாய்த்தது. அவர்கள் தேவிக்குத் தங்கள் வணக்கத்தைச் செலுத்திய பின் தேவியின் விருப்பத்தின்படியும கட்டளைப்படியும் ஸ்ரீ லலிதா சகஸ்ரநாம தோத்திரம் வசின்யாதி வாக்கு தேவதைகளால் பாடப்பெற்றது. அகஸ்தியருடைய வேண்டுகோளுக்கு இணங்கி ஹயக்கிறிவர் லலிதா சகஸ்ரநாமத்தை உபதேசம் செய்தார். அவருக்கு (அகஸ்தியருக்கு) முதலாவது அத்தியாயத்தில் என்ன சந்தர்ப்பத்தில் ஹயக்கிறிவர் லலிதா சகஸ்ர நாமம் மந்திரத்தை உபதேசித்தாரென்றும் அது மிக இரகசியமான மந்திரமாக உள்ளதென்றும் அந்த மந்திரங்களின் பெருமையைப்பற்றியும் கூறப்பட்டிருக்கிறது. இரண்டாவது அத்தியாயத்தில் ஆயிரம் திருநாமங்களையும் தோத்திர ரூபமாகப் பாடப்பட்டிருக்கிறது. மூன்றாவது அத்தியாயத்தில் லலிதா சகஸ்ரநாம தோத்திரத்தைப் பாராயணம் பண்ணுவதால் என்ன பயனைப் பெறலாம் என்றும் காட்டப்பட்டிருக்கிறது.

'ஒரு நாமம் ஒருருவம்' ஒன்றுமிலாதார்க்கு ஆயிரம் திருநாமம் பாடுவதும், பேராயிரமும் பரவித்திரிந்து பெருமானைப் போற்றுவதும், நாமம் பிதற்றி நயனநீர் மல்கா வாழ்த்தா வணங்கா வாய் குழறா மனத்தால் நினைந்து உருகுவதும் முத்திப்பேற்றை [illegible] நாமங்களுக்குள் லலிதா சகஸ்ரநாமம் மிக மேன்மை வாய்ந்தது. ஆயிரம் திருநாமங்களைச் சேர்த்துத் தோத்திரம்செய்வதும் அவற்றுள் ஏதாவதொன்றை ஜெபம் செய்வதும் இம்மைக்கும மறுமைக்கும் பெருபயனைத் தரக்கூடியதெனப் பல சுருதியில் கூறப்பட்டிருக்கின்றது.

பிரம்மஸ்ரீ. யா. தி சதாசிவ ஐயர் அவர்கள் மாத்ருகா புஷ்பமாலா, இராசேஸ்வரி அஷ்டகம் என்னும் வடமொழி நூலகளை மொழி பெயர்த்து ஒரு புத்தகம் பல ஆண்டுகளுக்கு முன்னதாக வெளியிட்டார். தேவி மானச பூசை என்னும் ஒரு நூலை யாத்து திரு. வே. மகாலிங்கசிவம் அவர்களின் ஞாபகசின்னமாக வெளியிட்டார். அவருக்குப்பின் அவருடைய குடும்பத்தைச் சார்ந்த பிரமஸ்ரீ. ஆத்மநாதசர்மா "லலிதாம்பிகை அருட்பேராயிரம்" பாடி உதவினமை பாராட்டத்தக்கது. இந்த வெளியீட்டின் ஒவ்வொரு பக்கத்திலும் மேல் அரைவாசியில் தமிழ் மொழியில் பாடப்பட்டபாட்டுகளும் கீழ் அரைவாசியில் தமிழ் எழுத்தில் லலிதாதேவியின் நாமாவளியும் அச்சிடப்பட்டு இருக்கின்றன. சமஸ்கிருதத்தில் உண்டான சொற்களை தமிழ் எழுததுக்களில் உச்சரிப்பது மிகக்கஷ்டம். அதை உணர்ந்து அனுபந்தமாகக் கிரந்த லிபியில் ஆயிரம் திருநாமங்களையும் பிரம்மஸ்ரீ ஆதமநாதசர்மா சேர்த்திருக்கின்றார்.

வடமொழி அறிவு இல்லாத தமிழ்மக்கள் அன்னை லலிதாம்பிகை அருட்பேராயிரம் என்ற நூலை வாசித்து, தேவியின் பெருமையை உணரக் கூடியதாக இருக்கும், அவர்களுள் ஒருசிலர் தேவியில் உண்டான பக்தி மேலீட்டினல் வடமொழியைக் கற்கவும் ஸ்ரீ லலிதா சகஸ்ரநாமத்தை வடமொழியிலேயே கற்றுப் பாராயணம் பண்ணவும் இந்த வெளியீடு துணையாக இருக்கும்.

—0—

# சைவம் வளர்த்த சங்கரபண்டிதர்

—0—

[திரு வை முத்துக்குமாரசாமி B. A. அவர்கள்]

[இப்பெரியார் 1829ம் ஆண்டு விரோதி வருடம் சித்திரை 21-ந் திகதி பிறந்தார். இதை நினைவு படுத்துமுகமாக இக் கட்டுரை எழுதப்பட்டது.

நாவலர் பெருமான் காலத்தே, பத்தொன்பதாம் நூற்றாண்டுத் தொடக்கத்தில் நாவலருக்குச் சைவத் தொண்டையும் தமிழ்த் தொண்டையும் சிறப்பாகச் செய்யத் துணை புரிந்தவர் நீர்வேலி ஸ்ரீலஸ்ரீ சிவசங்கர பண்டிதர். பாரத யுத்தத்தில் அர்ச்சுனனுக்குப் பின்னணியாக இருந்தவர் கிருஷ்ணபரமாத்மா; நாவலா பெருமானின கிறிஸ்தவ கண்டனங்களை எழுதுவதிலேயோ, சைவ மதப் பிரசாரம் செய்வதிலேயோ ஈடுபட்டுஉழைத்த பெரியார் ஸ்ரீலஸ்ரீ சங்கர பண்டிதர் அவர்கள்.

சுன்னுகத்திற் பிரசித்தி பெற்று வாழ்ந்த சைவ வேளாளராகிய சங்கரப்பிள்ளையின் மரபிற் பிறந்த சிவகுருநாதபிள்ளை செய்த தவத்திலலே, நீர்வேலி அருணசலம்பிள்ளை புத்திரி தெய்வானை அம்மையாரிடத்தில சிவசங்கரர் அவதாரஞ் செய்தார்

### இவரது ஆசிரியர்கள்

இளமைப் பருவத்திலே சிறந்த குரவர்களிடம் படிக்க இவருக்கு வாய்ப்புக் கிடைத்தது. சேனதிராச முதலியாரவர்களின் மாணக்கராகிய கந்தரோடை அப்பாப்பிள்ளையவர்களிடத்திலே தமிழில் இலக்கிய இலக்கணஙகளும் கற்றார், சத்திய ஞான தரிசனிகள் பரம்பரையினரும் தம்பரமபரைத் தீக்ஷா குருமரபினருமாகிய வேதாரணியத்து வடக்குத்தெரு வை. சுவாமிநாததேசிகரவர்களிடத்திலே வடமொழி, நிகண்டு காவியம் முதலியவற்றைப் படித்தார்; ஷை தேசிகரது சகோதராகிய சு முத்துச்சுவாமி தேசிகரவர்களிடத்து நிருவாண தீட்சை பெற்றார்; அவர் மைத்தனர் அ. சுவாமிநாத தேசிகரவர்களிடத்திலே சித்தாந்த சாத்திரங்களைக் கற்றார். திருப்புகலூரில் இருந்து ஒரு சாத்திரியாரிடம தருக்க வியாகரணங்களைக் கற்றார்.

அவர் கற்ற காலத்தில் சம்ஸ்கிருத நூல்கள் அச்சிடப்பட்டிருக்கவில்லை. யாழ்ப்பாணத்திலேயன்றி இந்தியாவிலும் உள்ள பற்பல ஊர்களிற் சென்று ஏட்டுப் பிரதிகளைச் சேகரித்தனர். பலவற்றைப் பரிசோதித்து எழுதினர்.

### இவர் ஆற்றிய பணிகள்

சைவ தூஷண பரிகாரத்தின் உபோற்காதம் இவர்களுடைய வசனமே. தமிழ் நாட்டில் ஒரு சிவஞான சுவாமிகளும நமது ஈழநாட்டில் ஒரு சிவசங்கரபண்டிதரும வடமொழியிலும் தமிழ் மொழியிலும் இலக்கண, தருக்க வியாகரண முறையில் பாண்டித்தியம் பெற்றிருந்தனர். சைவ ஆகம நுட்ப திட்பங்களை நன்கு ஆராய்ந்தறிந்தவர்கள் சிவசங்கர பண்டிதர், சிவசங்கர பண்டிதர் சுத்த அத்வைத சித்தாந்த நெறியில் தலைநிமிர்ந்து நிலைத்து நின்றவர்கள்; மாயாவாதத்தில் சிக்காமல், சைவ சித்தாந்த ஊற்றுக்களை அள்ளி அள்ளிப் பருகியவர்கள்' திருமுறைகளையும் திருக்குறளையும் அலசி அலசி அல்

தொடர்ச்சி 4-ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபை

—————0—————

## சித்தாந்த பிரவேச பண்டிதர் பாலபண்டிதர் தேர்வுகள் 1964

கொழும்பு விவேகானந்த சபையாரால் நடாத்தப் பெற்றுவந்த மேற் கூறிய தேர்வுகளை அவர்களது வேண்டு கோளுக்கிணங்கி நடத்தச் சைவபரிபாலனசபை தீர்மானித் திருக்கிறது.

இத்தேர்வுகள் மார்கழி மாதத்தில் யாழ்ப்பாணம் மட்டக்களப்பு, கொழும்பு, திருக்கோணமலை ஆகிய இடங்களில் நடாத்தப்பெறும். போதிய பரீட்சார்த்திகள் இல்லாத தேர்வு ஸ்தானங்கள் மாற்றியமைக்கப்படும். பிரவேச பண்டிதர் தேர்வில் சித்தியடைந்தவர்கள் பாலபண்டிதர் தேர்வுக்குத் தோற்றலாம். விண்ணப்பங்கள் உரிய மாதிரித் தாளில் நிரப்பி 15-8-64 க்கு முன் கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபால் மூலம் 'பரீட்சைச் காரியதரிசி, சைவ பரிபாலனசபை, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பப் படல் வேண்டும்.

கொழும்பு விவேகானந்த சபைக்கு விண்ணப்பம் செய்தவர்கள் விண்ணப்பிக்க வேணடியதில்லை.

கட்டணம்:—

பிரவேச பண்டிதர் 3/=
பால பண்டிதர் 5/=

### பாடவிதானம்

#### பிரவேசபண்டிதர்

பகுதி I.

1. பொது அறிவு: பதி பசு, பாசம், தத்துவம், குருலிங்க சங்கமம், பஞ்சாட்சரம், தியானம், விரதம், ஆணவம், கன்மம, மாயை, சரியை கிரியை, யோகம் ஞானம், இவை பற்றிய விரிவான பொது அறிவு.
2. சாத்திரம்: (அ) உண்மை விளக்கம் உரையுடன்
   (ஆ) சிவப்பிரகாசம் உரையுடன்
3. தோத்திரம்: (அ) அகத்தியர் தேவாரத்திரட்டு உரையுடன்
   (ஆ) திருவாசகம் — நீத்தல் விண்ணப்பமும், திருவெம்பாவையும் உரையுடன்.

பகுதி II.

4. இலக்கியம்: (அ) திருக்குறள் — அதிகாரம் 1 தொடக்கம், 24 முடியவுள்ள பகுதி உரையுடன்.
   (ஆ) சுந்தர் கவி வெண்பா உரையுடன்,
5. புராணம்: (அ) பெரிய புராணம்-கண்ணப்பநாயனர் புராணம் (செய்யுளும் உரையும்)
   (ஆ) திருவிளையாடற்புராணம்—வசனம்- -ஆறுமுக நாவலர்.
   (இ) கந்தபுராண விளக்கம் — திரு, சு, சிவபாதசுந்தரம் அவர்கள்.

#### பாலபண்டிதர்

பகுதி I.

சாத்திரம்: திருக்களிற்றுப்படியார், திருவுந்தியார், வினா வெண்பா, போற்றிப்பஃறொடை, கொடிக்கவி, நெஞ்சுவிடுதூது, உண்மைநெறி விளக்கம்,

இலக்கியம்: தேவாரம் அடங்கன்முறை-திருமுறை ஒவ்வொன்றிலிருந்தும் முதல் ஐவைந்து திருப்பதிகங்கள், திருவாசகம் - திருச்சதகம்.

பகுதி II.

இலக்கியம்: திருக்குறள் அதி—25 முதல் 62 முடிய. கந்தபுராண கலாசாரம்.

புராணம்: பெரியபுராணம், செய்யுளும் உரையும் — திருஞானசம்பந்த சுவாமிகள் புராணம் — திருப்பாடல்கள் 1 முதல் 500 வரை, பெரியபுராணவசனம், ஆறுமுகநாவலர்.

கௌரவ பரீட்சைக்காரியதரிசி,
சைவபரிபாலனசபை,
யாழ்ப்பாணம்.

6-5-64

## சைவசமய உண்மைகள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பெருமானுக்கும் சிவனடியார்களுக்கும் தொண்டு செய்தலே சிவபுண்ணியமாம். இச்சிவ புண்ணியத்தால் யான் இன்ன நல்வினை செய்தேன் எனக்கு இன்னர் தீவினை செய்தார் என்னும் நினைப்பு நீங்குதலாகிய இருவினைச் சமபுத்தியுண்டாகும். இச்சம புத்தியால் அகங்காரம் கெட ஆணவ அழுக்கு நீங்கும் பருவம்வரும். அப்பருவத்தில் சிவபெருமானுடைய திருவருள் ஆன்மாவினிடம் விசேஷமாகப்பதியும். அச்சமயம் சிவபெருமானே குருவாக எழுந்தருளி வந்து ஞானோபதேசம் செய்வர்.

10. அவ்வாறு ஞானோபதேசம் பெற்ற உயிர் அவ்வுபதேச நெறியை உறுதியாகக்கொண்டு சிவபெருமானைத் தன்னுள்ளே சிவோகம் பாவனை செய்து நாடும். அங்ஙனம் நாடிய காலத்து மாயா காரியமாகிய உலகப் பொருள் முதலியவற்றின் நிலையாமை கண்டு, உயிர் அவற்றினின்று நீங்கவே, அவ்வுயிர்க்குச் சிவபெருமானுடைய ஞான சொரூபம் விளங்கும். இவ்வித ஞான சொரூப விளக்கம் நிலைபெறுதற்கு வேண்டப்படுவன சிவாலயத்தையும் சிவனடியார்களையும் சிவனெனவே கண்டு வழிபடுதலும் ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தை விதிப்படி உச்சரித்தலுமாம்.

11. ஞான சொரூப விளக்கம் நிலைபெற்ற உயிர், முன் பாசத்தோடு கட்டுண்ட காலத்துச் சிவபெருமானை வேறு காணாது நின்ற நிலைபோல இப்பொழுது தன்னை வேறு காணாது சிவபெருமானோடு ஒற்றுமைப்பட்டு அவரருளாலல்லது ஒன்றையும் செய்யாது நிற்கும். அவ்வாறு நிற்கும் உயிர் சிவபெருமான் தன்னோடு அநாதியே இரண்டறக் கலந்து நின்று கருணையால் உபகரித்து வரும் உரிமையை நோக்கி நோக்கி, அப்பெருமானிடத்து [illegible] மூறுகி வளரப்பெறும். இதுவே ஞானத்தின் முடி[illegible]

(தொடர்ச்சி 4ம் பக்கம்)

உத்தரவாதம்! உயரிய வேலை! நீடிய உழைப்பு!
சிறந்த அழகு! இவைகள் அனைத்தும் அமையப்பெற்ற
பவுண், வைர ஆபரணங்களுக்கு
சிறந்த இடம்:
எல். கே. எஸ்.
"தங்க மாளிகை"
கன்னாதிட்டி, :: யாழ்ப்பாணம்.
போன்: 281. தந்தி: ஜுவல்லர்ஸ்.

இவ்வாரம் 17-5-64 — 23-5-64

## உங்கள் பலன்?

[ஸ்ரீ இராதாகிருஷ்ணன் கணிப்பது]

மேடராசி அச்சுவினி, பரணி கார்த்திகை முதற்கால்.

சீர்படும்பாட்டிற் கேற்ப ஈடு செய்யப்படமாட்டீர். உடல்நிலை ஊறுபடும். சிறு விபத்துக்களுக்கும் கண்நோய்களுக்கும் இடமுண்டு,

இடபராசி கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்,

நிம்மதி யிருக்காது. இரகசிய எதிரிகளினால் தொல்லையும் ஏற்படலாம். வசைபரப்புவோர்பற்றி எச்சரிக்கை உடல்நிலையும் ஊறுபடும். நண்பர்கள் இடரிலிருந்து காப்பர்.

மிதுனராசி மிருகசீரிடம், 2 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1ம், 3ம் பாதம்.

அதிக வேலையும் ஏற்றபலனும், புது முயற்சிகளில் நிச்சய வெற்றியும் புகழும் சமூக வெற்றியும் உண்டாம்.

கடகராசி புனர்பூசம் 4ம் பாதம், பூசம் ஆயிலியம்,

போட்டியாளரை வெல்வது நிச்சயம், பழைய முதவீடுகள் நற்பலனைத்தரும். குடும்ப அமைதியும், சிறு சுகவீனங்களும் உண்டாம்.

சிங்கராசி மகம், பூரம். உத்தரம் 1-ம் பாதம்.

பணமளவில் நல்ல வாரம், நிலபுலங்களால் வருவாய் நிச்சயம், தந்தை வழி உறவினர் மிக உதவுவர், சிறு குடும்பத்தகராறுகள் உண்டாம்,

கன்னிராசி உத்தரம் 2, 3 4 பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.

தாயாரின் உடல்நிலை பாதிக்கப் படும். இனத்தவரால் இடர்களும் புது முயற்சிகளில் தடங்கலும், அலுவலகத்தில் சச்சரவும் உண்டாகலாம்,

துலாம், சித்திரை 3, 4ம் பாதம் சுவாதி விசாகம் 1, 2, 3ம் பாதம்

குடும்ப அணியில் சில பகைமைகள் முளைக்கலாம், உடல் நிலையும் ஊறுபடும். பணமளவில் நல்ல வாரம். எதிர்பாலைச் சேர்ந்த நண்பர்கள் மிக உதவுவர்,

விருட்சிகராசி விசாகம் 4ம் பாதம் அநுஷம், கேட்டை.

இனத்தவருடன் மோதலுண்டாம் உமது சுதந்திரம் கட்டுப் படுத்தப்பட்டிருக்கும், குடும்பத் தகராறும் புது முயற்சியில் சுணக்கமும் உண்டாம்.

தனுராசி மூலம், பூராடம் உத்தராடம் 1ம் பாதம்,

எதிரிகளுக்கு இடையூறு நிச்சயம். பண இலாபமும புகழும் உண்டாம், ஞாயிறும் புதன் காலையும் எச்சரிக்கையோடு கழிதல் வேண்டும்,

மகரராசி உத்தராடம் 2, 3, 4ம் பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம், பாதம்

சண்டைகளுக்கு மூந்தி நிற்பீர். அலுவலகத்தில் மோதல்கள் உண்டாம். திங்கள் மாலை செவ்வாய், புதன் எச்சரிக்கையுடன் கழிய வேண்டும். மிகுதி நாட்கள் ஓரளவுக்குச் சாதகமானவை,

கும்பராசி அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி

நிலபுல வருமானம் நிச்சயம், தம்பி தங்கையர் மிக உதவுவர். சுகவீனம் வயிற்றுக்கோளாறு ஏற்படலாம். புதன் மாலை வியாழன் வெள்ளியை எச்சரிக்கையோடு கழிக்குக.

மீனராசி பூரட்டாதி 4, உத்தரட்டாதி ரேவதி.

குடும்பத்தில் அமைதி நிலவும், எதிரிகளுக்கு இடையூறு நிச்சயம். நிலபுலங்களால் இலாபம் உண்டாம். வார இறுதி நாளை எச்சரிக்கையாகக்கழிக்குக.

ஜாதக பலன்
இலவச ஜாதக பலன்.
விபரமறிய, புதிய 10 சதம் தபாற்தலையுடன்எழுதுங்கள்,
மேலைப்புலோலிநூல்நிலையம், பருத்தித்துறை, (இலங்கை)
Melaippuloly Noolnilayam, Point Pedro. (Ceylon).
M 34 8, 15-5-64,

எஃப். ஜீவாஜி சகோதரர்கள்
மொத்த, சில்லறை வியாபாரிகள்
அச்சுக்கந்தோர்களுக்கும், பாடசாலைகளுக்கும் தேவையான காகிதம், அச்சடிக்கும் மைகள், பாடசாலை உபகரணங்கள், பாண்சாலைகளுக்கான 'கேக்' பெட்டிகள், கடுதாசிப்பைகள், வியாபாரிகளுக்கான என்வலப்புகள், நூல், மை, கொப்பி, பென்சில், பாடசாலைப் புத்தகங்கள், பேனை, பலவிதமட்டைகள், சோடானைக்கடுதாசிகள் என்பன எம்மிடம் மொத்தமாகவும், சில்லறையாகவும் மலிந்த விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.
எஃப். ஜீவாஜி சகோதரர்கள்,
ஜுபிலி பஜார், இலக்கம் 9, மின்சார நிலைய வீதி, (ராணி சினிமாவுக்கருகில்) யாழ்ப்பாணம்.
தலைமைக்காரியாலயம்: ஜீவாஜி சகோதரர்கள், 50. புதிய சோனகதெரு கொழும்பு-12
கிளை: இண்டிப்பெண்டன் ரேடிங்கொம்பனி, 51A, 1-ம் குறுக்குத்தெரு கொழும்பு - 11
[illegible] புதிய சோனகத்தெரு, கொழும்பு 12
[illegible]

### கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டிலே

நல்லூர்
1, சின்னத்தம்பி சின்னையாவும் பெண்
2. நேசம்மாவும் -வழக்காளிகள்
இல. M-B, 5471

எதிராக

(இறந்துவிட்டார்)
கரையூர், அந்தோனி மனவல்
கரையூர்,
மனவல் தேவசகாயம்பிள்ளை, பிலேந்திரன்செபஸ்தியாம்பிள்ளை இறந்தவருக்குப்பதிலாக நியமிக்கப்பட்ட எதிரிகள்
—எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M.B. 5471-ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி கீழ் காணும் ஒரு துண்டுக்காணி 1964 - ம்ஆ ஜூன்மீ 18 உ வியாழக்கிழமை (18-6-1964) முற்பகல் 10 மணி தொடக்கம் அக்காணிக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:-முதல்வட்டி ரூபா 2336. இன்னும் ரூபா 2000-க்கு 8-3-63 தொடக்கம் 26-11-63 வரை 12% வட்டியும் கூடிய தொகைக்கு அதன் பின்னர் இறுபடும்வரை 5% வட்டியும் கோட்டுச் செலவு ரூபா, 233-40 ச.

காணியின் விபரம்:

வடமாகாண யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி சுண்டிக்குளிக் கோவிற்பற்று கரையூரிறை "பறையன் மணற்காடு" குழி 7 5/8, இக்காணிக்குள் கட்டப்பட்டிருக்கும் கல்வீட்டிலும் கிணற்றிலும் பங்கும், இதற்கெல்லை கிழக்கு றோட்டு வடக்கும் மேற்கும் சவரிமுத்து அந்தோனிப்பிள்ளைக்கும் பெண் தெரேசம்மாளுக்குமுரியஆதனம், தெற்கு ஒழுங்கை, பதிவு யாழ்ப்பாணம் D 269/252.

செ. இரத்தினசபாபதி
கொமிஷனரும்விலைமதிப்பாளரும்
ஸ்ரேசன் றோட்,
கோண்டாவில் மேற்கு.
கோண்டாவில், 1-4-64.
M. 53 15-5-64.

### கோட்டு விற்னவு விளம்பரம்

சுளிபுரம் கிழக்கு
1, அப்பலவாணர் கிருஷ்ணர்
2. பெண் மனோன்மணி
—வழக்காளிகள்.
இல. M.B 4717.

எதிராக

சுளிபுரம், 1. பெரியார் நாகேசு
,, 2. பெரியார் நவசர்
—எதிராளிகள்,

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில் M.B, 4717-ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணியை 1964-ம் ஆண்டு ஜூன் (ஆனி) மாதம் 20-ம் திகதி (20-6-64) சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்,

தீர்வைத்தொகை:-முதல்வட்டி ரூபாய் 495—25-ம், இதில் ரூபாய் 350-க்கு 22-3-62 திகதி தொடக்கம் 23-10-62 திகதி வரைக்கும் 100-க்கு 12 வீத வட்டியும், பின் திகதிதொடக்கம் முழுத்தொகைக்கும் இறுபடும்வரைக்கும் 100-க்கு 5 வீத வட்டியும், கோட்டுச் செலவு ரூபாய் 221-25 சதமும். மேலும் ரூபா 17-10 சதமும். இதில் ரூபா 150 இறுபட்டது,

காணியின் விபரம்:

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்குப் பகுதி சங்கானைக் கோவிற்பற்று சுளிபுரமிறை "தச்சதோட்டம்" நிலப்பரப்பு ஐந்து, இதில் ஆட்சப்படி கிழக்கே சிந்தமாக நிலப்பரப்பு ½ - ல் வடக்கெல்லைக் காணிக்குள் இருக்கும் கிணற்றில் பங்கும் வழிவாய்க்காலும். எல்லை கிழக்கு இராசையா பெண் நவமணியின் ஆதனம், வடக்கு சின்னப்பு கைம்பெண் ஆச்சிமுத்துவின் ஆதனம், மேற்கு அம்பலம் கைம்பெண் சரஸ்வதியின் ஆதனம் தெற்கு முகதப்பு சின்னத்தம்பியின் ஆதனம் இதடங்கலும், முற்பதிவு E 334/232

சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை,
Commissioner & Valuer,
Licensed Auctioneer.
தெல்லிப்பழை 20-4-1964.
M 36 15-5-64

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## சைவம் வளர்த்த......

2-ம் பக்கத் தொடர்ச்சி

லும் பகலும் ஓதி வந்தவர்கள்.

வேத உபநிடதங்கள், சித்தாந்த சாத்திரங்கள் யாவும் ஒரு பொருளையே புகட்டுகின்றன என்னும் தெளிவு கொண்ட பெரியார் அவர். வேதாந்தத்தின் முடிவு சைவ சித்தாந்தமே என்பது அவர்கண்ட முடிபு. நீர்வேலி அவருடைய சிவநெறியாலும் தவநோக்காலும் புனிதமாயிற்று.

அவருடைய திண்ணைப் பள்ளிக்கூடத்திலே படித்தவர்களுள் சிறந்தவர்கள் சபாபதி நாவலர், முருகேச பண்டிதர் முதலியோராவர்.

## பிழை திருத்தம்

—0—

இவ்விதழில் 'அன்னை லலிதாம்பிகை அருட்பேராயிரம்' என்ற நூலின் அணிந்துரையில்வரும் 4-ம்பந்தியினை, 'ஒரு நாமம் ஒருருவம்' ஒன்றுமிலாதார்க்கு ஆயிரம் திருநாமம் பாடுவதும், பேராயிரமும் பரவித்திரிந்து பெருமானைப் போற்றுவதும், நாமம் பிதற்றி நயனநீர் மல்கா வாழ்த்தா வணங்கா வாய்குழறு நின்று மனத்தால் நினைந்து உருகுவதும் முத்திப்பேற்றை விரும்பும் அடியார்களால் செயற்பாலனவாகும் என்று திருத்திக்கொள்க ப—ர்.

## சைவசமய உண்மைகள்

[ 3-ம் பக்கத் தொடர்ச்சி ]

12. இவ்வித ஞானநிலை அடைந்தவர்களே சிவஞானிகள். அவர்களிடம் ஆணவம் வறுத்த வித்துப்போற் பயனற்றுக் கிடக்கும். ஆணவம் பயனற்றுக் கிடப்பவே தானென்னும் முனைப்பில்லாமையால் கர்மம் இல்லை இவை இல்லாமையால் மாயையும் அவர்களுக்கு வேண்டப்படுவதில்லை. ஆகவே சிவஞானிகள் ஆணவம் கர்மம் மாயையென்னும் மூன்று தடைகளும் அவற்றின் வாசனையும் நீங்கி, அறிவு முழுவதும் விளங்கப்பெற்று எல்லாம் சிவமயமாகக் கண்டு, சிவபெருமானுற் கொடுத்தருளப்பெறும் பேரானந்தத்திலே அழுந்தி ஆனந்தமயமாயிருப்பார்கள் இதுவே மோக்ஷ நிலை.

— "சமய சாதனம்"

## கோட்டு விற்பனவு விளம்பரம்

மாவிட்டபுரம்
பரமு வேலுப்பிள்ளை
—வழக்காளி

இல. M,B, 4583

எதிராக

1. மாவிட்டபுரம், சின்னத்தம்பி கிருஷ்ணபிள்ளை
2. ஷை பரமு வயிரமுத்து

—எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திரிக்கோட்டின் 4583-ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் 1 துண்டுக்காணி 1964 ஞூ ஆனிமீ 20-ம்உ சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்,

தீர்வைத்தொகை:-முதல்வட்டி ரூபா 555 இதில் ரூபா 500-க்கும் 2-2-62 தொடக்கம் 25-10 62 வரைக்கும் 12 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுபடும் வரைக்கும் 5 வீதமான வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 38-00 கோட்டுச் செலவில் செலவழித்த செலவு ரூபா 98 சதம் 20-ம் வெலியாத்தச்செலவு ரூபா 25-ம், மற்றும் காசு எடுக்கும் செலவு ரூபா 15 சதம் 60-ம்.

காணி விபரம்,

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திரிக் வலிகாமம் வடக்குப் பகுதி தெல்லிப்பளைகோயிற்பற்று மாவிட்டபுரம் இறை, "காடுத்தவத்தை" நிலப்பரப்பு பததேமுக்காலும் (நில, பர, 10¾) வீடும் செய்பயிர் வான்பயிர்களும் கிணறும். எல்லை கிழக்கும் வடக்கும் ஒழுங்கை, மேற்கு சுப்பர் பெண் அன்னப்பிள்ளைக்கும் உறுதி ஏற்பவருக்கும், தெற்கு கிருஷ்ணசாமி பெண் ஞானம்பிகைக்கும் மறுபேருக்கும், இதில் நிலப்பரப்பு இரண்டு சொரியலும் அதைச் சேர்ந்தவையும். பதவு இலக்கம் யாழ்ப்பாணம் H 275,90

க. சுப்பிரமணியம்
கொம்மிஷனர்.
24-ம் நம்பர், 1-ம் குறுக்குத்தெரு
யாழ்ப்பாணம்.
14-4-1964.

M. 39 15-5-64

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம், பாஷையூர்

1. அந்தோனி கவரியேலும் பெண்
2. லியோனியாவும்

—வழக்காளிகள்

இல. M.B. 4635

எதிராக

யாழ்ப்பாணம் பாஷையூர்

1. ஞானப்பு மடுதம்தசுவும் பெண்
2. கெரிமேர்சியாவும்

—எதிரிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திரிக்கோட்டின் M,B, 4635-ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் 1 துண்டுக்காணியை, 1964-ம்ஞூ ஆனிமீ 20உ சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:-முதல்வட்டி ரூபாய் 7333-ம், 19-2-62 தொடக்கம் 1-4-63 வரைக்குப் ரூபாய் 4000-க்கு 12 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 336/50-ம்.

ஆதன விபரம்:

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திரிக் யாழ்ப்பாணப்பகுதி சுண்டிக்குளி கோயிற்பற்று சுண்டிக்குளி இறை, "சின்ன மெஞ்ஞான கந்தன் குடிஇருப்பு" 5¼ குளி ஷை 5¼ குளி ஷை 3 குளி ஆகக்கூடிய விசாலம் 13½ குளி வீடும், தென்னைகள் மற்றும் செய்பயிர் வான்பயிர்களும். இந்தக் குளி பதின்மூன்றரைக்கும் எல்லை கிழக்கு பாவிலு நிபோவுக்கும் பெண் சிசிலியாவுக்குமுரிய ஆதனம். வடக்கு ஒழுங்கை, மேற்கு தாவிது பேதுருவுக்கும் பெண் ருகேலுக்கும், அந்தோனிப்பிள்ளை பறுணந்துவுக்குமுரிய ஆதனங்கள். தெற்கு முத்தையா பிலிப்புக்கும் பெண் அன்னக் இளிக்குமுரிய ஆதனம், இதடங்கலும். பதிவிலக்கப் D 199/84.

அ. வெற்றிவேலு
கொமிசனரும் விலைமதிப்பாளரும்.
19, வேம்படி வீதி,
யாழ்ப்பாணம்,

M 40 15-5-64,


## சைவ சித்தாந்த சொற்பொழிவுகள்

—0—

இந்துசமயக் கல்விவிருத்திச் சங்கத்தின் ஆதரவில் மாதந்தோறும் மூன்றுவது ஞாயிற்றுக்கிழமைகளில் பிற்பகல் 4 30 மணி தொடக்கம் சைவ சித்தாந்தம் என்னும் பொருள் பற்றி உயர்திரு சு. நடேசபிள்ளை அவர்கள் சிறப்புச் சொற்பொழிவுகள்நிகழ்த்த இசைந்துள்ளார்கள. இத்தொடர்பின முதலாவது சொற்பொழிவு மே மாதம் 17-ந் திகதி ஞாயிறுக்கிழமை பிற்பகல் 4-30 மணிக்கு இராமநாதன் கல்லூரியில் நடைபெறும் இச்சொற்பொழிவுகளைக் கேட்டுப் பயனடைய விரும்பும் அன்பர்கள் தங்கள் பெயர்களை மேற்படி சங்கக் காரியதரிசி தெல்லிப்பழை என்ற விலாசத்துக்கு அனுப்பி வைக்குப்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

## பகிரங்க ஏலவிற்பனவு விளம்பரம்

மானிப்பாய் முதலியார் கனகசபை வீதியில் 14 கட்டிடத்திற்கான நிலங்கள் விற்பனைக்கு உள்ளன. யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில் T. R. 43-ம் இலக்க வழக்கில் ஆனைக்கோட்டை மடதர்மத்துக்குரிய கீழ்க்காணும் 14 துண்டு ஆதனங்களை அத்தர்மத்தின் "டிரஸ்டிகளாகிய" துரைச்சாமி தியாகராசாவும் செகராசசிங்கம் நமசிவாயமும், மூத்துச்சாமி சண்முகநாதனும் யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில் 1964-ம் ஆண்டு பங்குனி மாதம் 26-ந் திகதி விற்கத்தந்த கோட்டு உத்தரவின்படியும் அந்த ஆதனங்களை விற்றுவரும் பணத்தைக் கோட்டில் கட்டும்படி செய்த கோட்டுக் கட்டளைப்படியும் முதல் 7 துண்டு ஆதனங்களை 1964-ம் ஆண்டு ஆனி மாதம் 12ந் திகதி வெள்ளிக்கிழமை (12-6-64) காலை 9 மணி தொடக்கமும் மிகுதி ஆதனங்களை மறுநாள் 13-ந் திகதி சனிக்கிழமை (13-6-64 காலை 9 மணி தொடக்கமும் அந்தந்தக் காணிக்குள் நின்று பகிரங்க ஏலத்தில் என்னால் விற்கப்படும்,




மானிப்பாய் இந்துக்கல்லூரி, மகளிர்கல்லூரி, பட்டினசபைக்கட்டிடம், மருதடிப் பிள்ளையார் கோவில், தேவாலயம், தபாற்கந்தோர், வைத்தியசாலை என்பவற்றுக்குச் சமீபத்தில் உள்ளது. தேவையான மின்சார வசதிகள் இலகுவில் பெற்றுக்கொள்ளலாம்.

மேலும் தேவையான விபரங்களை நல்லூர் No, 19 செட்டித்தெரு பிறக்ரர் & நொத்தாரிசு C. T குமாரசுவாமி அவர்களிடம் அறிந்து கொள்ளலாம்.

தா. செல்லையா
Commissioner, Auctioneer & Valuer
No. 37, Colombuthurai Road,
Chundikuli.

M 27. 7, 15-5-64

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. M. B. 3639.

சபாபதி சவுந்தரநாயகம் மகள் மல்லிகாதேவி, மானிப்பாய்
—வழக்காளி.

எதிராக:

1, ஆறுமுகம் குமாரசாமியும் மனைவி
2, நாகம்மா, மானிப்பாய் — தற்பொழுது புதுக்குடியிருப்பு மூல்லைத்தீவு.

—எதிரிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில் M. B. 3639-ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் இருகாணிகளை 1964-ம் ஆண்டு ஆனி மாதம் 27-ந்திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தந்தக்காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

தீர்வைத்தொகை;- ரூபா 6850-ம், 23-9-60 தொடக்கம் 3-5-61 வரையில் ரூபா 6000-க்கு 12 வீத வட்டியும் அதன்பின் பணம் முற்றாக இறுபடும் வரையில் முழுக்கூட்டுத்தொகைக்கு 4-5-61 தொடக்கம் 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 258-95 இந்தக் கோட்டுச் செலவு ரூபா 258-95 முழுவதும் கொடுக்கப்பட்டது. இதைவிட ரூபா 1000 2-8-61 லும், இன்னும் ஒரு 1000 15-8-63 லும் கொடுக்கப்பட்டது.

ஆதனடாப்பு:

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் மானிப்பாய் கோவிற்பற்று மானிப்பாய் இறை "எளுமுள்ளி" பர நில. இலாச்சம் 9, குளி 12. இந்தக் காணிக்கு எல்லை கிழக்கு தியாகராசா பெண் ஆச்சிகுட்டியினதும் சின்னத்தம்பி சபாபதியினது உரிமைக்காரருக்குரிய ஆதனங்கள். வடக்கு அம்பலம் கனகசபையினதும், தூர்வையும் இந்தக்காணிக்குப் போக்குவரவு செய்யும் ஒழுங்கையும். மேற்கு தம்பிப்பிள்ளை தம்பித்துரைக்கும் அவர்மனைவி சிவக்கொழுந்துவிற்குரிய ஆதனமும் கிணற்றடிக்குப் போகும் ஒழுங்கையும், தூர்வை நிலமும் இக்காணிக்குப்போகும் ஒழுங்கை முகப்பும், கந்தையா பெண் மீனாம்பாவினது ஆதனமும், தெற்கு தூர்வை நிலமும் செல்லப்பா வயிரமுத்துவின் ஆதனமும், செய்பயிர்களும். மேற்கெல்லையிலிருக்கும் தூர்வை நிலமும். கிணற்றுப்பங்கும் மேற்கேயிருக்கும் ரேட்டிலிருந்து இந்தக்காணிக்கும் கிணற்றுக்கும் வரும் ஒழுங்கையில் பங்கும் வழிப்பாதையில் பங்கும், வழிப்பாதையில் நிற்கும் பலாமரம் ஒன்றும், இக்காணிக்குப் போக்குவரவு செய்யும் ஒழுங்கையில் நிற்கும் ஒரு தென்னையும். முற்பதிவு: E 320/37.

2 மேற்படி இறை, "எளுமுள்ளி தியாகர் தோட்டம் அல்லது தியாகர் தோட்டம்" பர நில இலாச்சம் 4, குளி 11. இந்தக்காணிக்கு எல்லை கிழக்கு சபாபதி ஆனந்தராசாவிற்கும் மனைவி புஷ்பமணியினதும் ஆதனம், வடக்கு அம்பலம் கனகசபையின் ஆதனம், மேற்கும் தெற்கும் ஒழுங்கையும் கல்வீடும் பயிர்களும். இந்தக்காணியின் மேற்கெல்லையிலிருக்கும் கிணறடல் பங்கும் வழிவாய்க்கால் தூர்வை உரித்து ... முற்பதிவு: E 324/25.

க. செல்லத்துரை,
கொமிஷனரும, விலைமதிப்பாளரும்.
"மாகன் இல்லம்"
இணுவில், 13-5-64.

M 38 15-5-64.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

அச்சுவேலி தெற்கு
வல்லிபுரம் இளையதம்பி
—வழக்காளி

வழக்கு இல. 3575/A

எதிராக

அச்சுவேலி
வல்லிபுரம் வீசுவலிங்கம்
—எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் 3575/A இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒருதுண்டுக்காணி 1964-ம் வருடம் ஆனி மாதம் 17-ந்திகதி (17-6-64) புதன்கிழமை காலை 10-30 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:-ரூபா 300-ம் 3-10-62 தொடக்கம் 3-5-63 வரைக்கும் ரூபா 164-க்கு 10வீத வட்டியும், அதன்பின் முழுத் தீர்வைத்தொகைக்கும் பணம் முற்றாக இறுபடும் வரைக்கும் 5 வீத வட்டியும், கோட்டுச் செலவு ரூபா 28-55 சதமும்-

காணி விபரம்:

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக், வலிகாமம் கிழக்குப் பகுதி, புத்தூர் கோயிற்பற்று, ஆவரங்கால் இறை, "வண்ணான் கேணி" நிலப்பரப்பு 38 குளி ¾. இதில் நடுபக்கமாகப் பிரிக்கப்பட்ட நிலப்பரப்பு 9 குளி 6¾. வீடுகளும் பயிர்களும், எல்லை கிழக்கு ரேட்டு, வடக்கு வயிரவப்பிள்ளை கந்தசாமியின ஆதனம், மேற்கு பாலை அப்பாத்துரைக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம், தெற்கு சிதம்பரப்பிள்ளை பெண் சின்னப்பிள்ளைக்குரிய ஆதனம். இதில் சொரியலாக 1/5 பங்கு, கிணற்றில் பங்கும் மேற்கெல்லையிலுள்ள கிணற்றில் வழி வாய்க்கால் உரிமையும்.

செ. பாண்டித்துரை,
கொமிஷனரும்விலைமதிப்பாளரும்
Commissioner of Sales & Valuer
தபாற்ந்தோரடி,
நவாலி, மானிப்பாய்,
11-5-64.

M. 37 15-5-64.

யாழ்ப்பாணம்

## —ஐக்கிய இலாப நிதி—

1918-ம் ஆ ஸ்தாபிதமானது

100 ரூபா விகிதமான 5000 பங்குகள்
பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது, குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்தநேரமும் வாங்கலாம்,

சேமிப்புப் பற்றுவரவு.

எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானல் ஒருவிகித வட்டியுடன் சேமிப்புப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்

க்ஷேமப்பணம் 12 மாசம், 36 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும்வட்டியும் முறையே 6 விகிதமும் 8 விகிதமுமாகக் கொடுக்கப்படும்.

கடன்

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும் முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை
என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.

S. கனகசபை
சிறுப்பர்.

Std. 14.

யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறை வீதி 450-ம் இலக்கத்திலுள்ள, சைவப்பிரகாச யந்திரசாலையில் யாழ்ப்பாணம் பிறவுண்வீதி, 2ம் ஒழுங்கை ... இலக்கத்தில் வசிக்கும் திரு. ஐயம்பிள்ளை சின்னத்துரை அவர்களால் 15-5-1964 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org